**செ.வெ. எண்: 555** **நாள்: 24.09.2012**

<u>செய்தி வெளியீடு</u>

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களை இன்று (24.9.2012) தலைமைச் செயலகத்தில், தச்சுத் தொழில் செய்து வரும் முதியவர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள் சந்தித்து வாழ்த்து பெற்றார்.

சென்னை, லாயிட்ஸ் சாலையில் வசிக்கும் 75 வயதான தச்சுத் தொழில் செய்து வரும் திரு. எம். ஆறுமுகம் அவர்கள் நீண்ட நாட்களாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை நேரில் கண்டு வாழ்த்து பெற வேண்டும் என்ற ஆவலுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமைச் செயலகம் வந்து செல்லும் வழியில் தினமும் காத்திருந்தார்.

நீண்ட நாட்களாக திரு. எம். ஆறுமுகம் அவர்கள் தம்மை காண்பதற்காகவே காத்திருப்பதை அறிந்த மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், அவரை தலைமைச் செயலகத்தில் தன்னை நேரில் சந்திக்க அனுமதித்தார்கள். அதன் அடிப்படையில் இன்று (24.9.2012) தலைமைச் செயலகத்தில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களை திரு. எம். ஆறுமுகம் அவர்கள் நேரில் சந்தித்து வாழ்த்து பெற்றார். அப்போது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் திரு.எம். ஆறுமுகம் அவர்கள், தான் நீண்ட நாள் கட்சிக்காரர் என்றும், தனது குடும்பம் அம்மா அவர்கள் மீது எப்பொழுதும் விசுவாசமாக உள்ளவர்கள் என்றும் தெரிவித்தார்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் திரு. எம். ஆறுமுகம் நல்ல உடல் ஆரோக்கியத்தோடு பல்லாண்டு வாழ வாழ்த்தினார்கள். திரு.எம். ஆறுமுகம், ஏழை, எளியவனான தன்னை நேரில் அழைத்து மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடன் புகைப்படம் எடுத்துக் கொள்ள அனுமதித்து தன்னை வாழ்த்தியமைக்காக தனது நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்தார்.

* * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை – 9.
நாள் : 24.9.2012